**<u>செய்தி வெளியீடு எண்.725</u>** **<u>நாள்.6.11.2007</u>**

# <u>குடிமைப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்களுடன் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் எ.வ. வேலு ஆய்வு</u>

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் இன்று (06.11.2007) காலை 10.30 மணிக்கு சென்னை, கோபாலபுரம், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகக் கூட்ட அரங்கில் குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள்.

ஆய்வுக் கூட்டத்தில், கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டம் மற்றும் குண்டர் தடுப்புச் சட்டத்தில் தொடரப்பட்ட வழக்குகள், கடத்தல் தடுப்புப் பணியில் கைப்பற்றப்பட்ட பொது விநியோகத் திட்ட அரிசி, மண்ணெண்ணெய், டீசல் போன்றவை பற்றி தொடரப்பட்ட வழக்குகள், தண்டனையுடன் முடிவு செய்யப்படும் வழக்குகள் பற்றி விரிவாக ஆய்வு செய்தார். சில குறைபாடுகளுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும், இத்தகைய குறைபாடுகள் ஏற்படாமல் வழக்குகள் நடத்த வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்கள். உணவு கடத்தல் தடுப்பு காவல் பிரிவில், கடத்தலில் ஈடுபடும் நபர்கள் பற்றிய நுண்ணறிவு விவரங்கள் திரட்டப்பட வேண்டுமென்றும், அதன் அடிப்படையில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்கள். மேலும், பிற மாநில எல்லையில் உள்ள மாவட்டங்களில் அலுவலர்கள் விழிப்புடன் பணியாற்ற வேண்டுமென்றும், அடுத்த நான்கு மாதங்களில் கடத்தல் தடுப்புப் பணியை தீவிரப்படுத்தப்பட வேண்டுமென்றும், சென்ற ஆண்டைக் காட்டிலும் மேலும் சிறப்பாக பணியாற்ற வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், திரு. கே. சண்முகம், இ.ஆ.ப., அரசு செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் தலைவர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திரு. கே. ராஜாராம், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. க. பணிந்தரரெட்டி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திரு. ஜிதேந்திர ஸ்வென், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், திரு. விபாகர் ஷர்மா, இ.கா.ப., கூடுதல் காவல்துறை இயக்குநர், குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை, திரு. எம். சிதம்பரசாமி, இ.கா.ப., காவல் துறை தலைவர், குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை மற்றும் துறையின் அலுவலர்கள் பங்கு பெற்றனர்.

வெளியீடு:இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை,சென்னை–9.